பிப்ரவரி மாதச் சிந்தனைகள்



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை

2022



PUBLISHED BY

COMMUNICATION COMMISSION SECTOR INDIA

டெலசால் அருட்சகோதரர்களின்
இந்திய மறைப்பணித்தளம்

## சிந்தனை தொகுப்பாளர் உரை

நீயாக மாறுவதே நிரந்தர மாற்றம். அன்பின் இறை நண்பர்களே, பிறரை தூக்கிவிட குனிபவனே உலகில் உயர்ந்த மனிதன். மாணவர்களின் கடமையையும், ஆசிரியர்களின் உன்னதமான பணியையும் இந்த பிப்ரவரி மாத இறைவார்த்தையோடு லசாலிய சிந்தனைகள் நமக்கு நினைவூட்டுகிறது. இருளை சபிப்பதை விட ஒளியை ஏற்றுவதே இன்றைய காலத்தின் கட்டாயம். எனவே நமது வாழ்வு பிறருக்கு ஒளியேற்ற வழிகாட்ட இறையாசீர் வேண்டுவோம்.

அருட்சகோ. **ஹெல்டன்** FSC
இளைஞர் நகர் –மதுரை



லசாலிய அழைப்பு என்பது வகுப்பறையே ஆலயமாக, மேஜையே பலிபீடமாக ஆசிரியரே பலிப்பொருளாகக் கொண்டு இளைஞர்களுக்கு அறிவு, ஞானம் அளிக்கும்

**ஒரு தியாக வாழ்வு**

# லசாலிய இறையழைத்தல்

## கல்வி பணிக்கு இறைவன் அழைக்கிறார்

## வந்து பாருங்கள்

(யோவான் 1: 39)

தொடர்புக்கு
இறையழைத்தல் இயக்குநர்,
புனித வளனார் துறவற பயிற்சி இல்லம்,
மங்களகிரி, தூத்துக்குடி - 628 103.
தொலைபேசி : 9363518327.



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





முதல் வாசகம்
2 சாமுவேல் 18:9-10,24-25,30-19:30

பதிலுரைப்பாடல்கள்
திபா 86:1-2,3-4,5-6

நற்செய்தி
மாற்கு 5:21-43

புனித
ஹென்றி மோஸ்

பிப்ரவரி 2022

# 01

செவ்வாய்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

## சிந்தனைத் துளிகள்

நாம் சாதிக்கப் பிறந்திருக்கின்றோம். தன்னம்பிக்கை, தெளிவு, துணிச்சல் இந்த மூன்றும் தான் ஒருவனை எப்போதும் காப்பாற்றி வழிநடத்திச் செல்லும் என்கிறார் – கன்பூசியஸ். இதையே புனித தெலசால் தன் சக ஆசிரியர்களுக்கும் சகோதரர்களுக்கும் இரத்தின சுருக்கமாக "ஒளிரும் விசுவாசம் மிளிரும் ஆர்வம்" ஒவ்வொரு சகோதரருக்கும் ஆசிரியர்களும் இரு கண்களாக இருக்க வேண்டும் என்கிறார். முதலில் இருக்க வேண்டும் நம்பிக்கை. உன் மீது உனக்கே நம்பிக்கை அடுத்து வாழ்க்கையின் மீது, இந்த உலகம் உன்னை சார்ந்தவர்கள் மீது, நீ சாதிக்க போகும் செயல் மீது, முடியும் நம்மால் நிச்சயமாக முடியும் என்கிற நம்பிக்கை தேவைப்படுகிறது.

நீ சாதிக்கவே படைக்கப்பட்டாய் எழுந்து நில். தொடர்ந்து விடியும் என்று விண்ணை நம்பு. முடியும் என்று உன்னை நம்பு. நம்பிக்கையுடன் எழுந்துவா – எதையும் சாதிக்கலாம். நாம் ஒவ்வொரு காரியத்தையும் முழுமையாக செய்வதே அதிர்ஷ்டம், மகத்தான காரியங்களுக்கு மகத்தான நம்பிக்கைகளே பிறப்பிடம் என்கிறார் விவேகானந்தர். நீ சாதிக்கவே படைக்கப்பட்டிருக்கின்றாய். தொடர்ந்து செல், தோல்வியை வெற்றியின் படிக்கட்டாக்கு.



### தெலசாலின் பொன்மொழி

நீங்கள் கடவுளுக்கு எவ்வளவு தருவீர்களோ, அதைவிட அவர் உங்களுக்கு ஆசீரை தருவார். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
மலாக்கி 3:1-4

இரண்டாம் வாசகம்
எபிரேயர் 2:14-18

நற்செய்தி
லூக்கா 2:22-40

ஆண்டவரை காணிக்கையாக ஒப்படைத்தல்

பிப்ரவரி 2022
**02**
புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

இன்று ஆண்டவரின் அர்ப்பண விழா. உன்னைப் போல் உன் அடுத்திருப்பவரையும் அன்பு செய் என்று இயேசுவின் வார்த்தையை வாழ்வாக்கி வாழ்க்கை முழுவதையும் பிறருக்காய் அர்ப்பணிப்பது தான் உண்மையான அர்த்தமுள்ள துறவறம். திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் ஆசியாவின் திரு அவை என்ற தலைப்பில் – இறைவனைத் தேடல், ஒருங்கிணைந்த வாழ்வு, பிறருக்காக பணிபுரிதல் ஆகிய மூன்றும் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வின் முதன்மையான பண்புகள் என்கிறார். இயேசுவின் பணியே துறவற வாழ்வுக்கு ஒளியாக அமைகிறது.

அர்ப்பண வாழ்வைத் தளரச் செய்யும் சவால்களை எதிர்கொள்வதற்கு துறவியர் வேண்டும். அர்ப்பணிக்கப்பட்டோர் இவ்வுலகை விழித்தெழச் செய்வர் என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகிறார். நாம் அனைவருமே நமக்குள் ஒரு அக்கினிச் சுடரோடு பிறந்துள்ளோம் அதைப் பெரிதாக எரியவைக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. பணிவும், தலைமையும் ஒரு சேரப் பயணிப்பவை. தலைமையின் தனித்தன்மை தாழ்ச்சி. இயேசுவின் தொடக்கம் மிகவும் எளிமையானது.



### தெலசாலின் பொன்மொழி

நீங்கள் உங்களை கடவுளிடம் அர்ப்பணித்ததோடு திருப்பி அடையக் கூடாது. மாறாக, நீங்கள் அந்த அர்ப்பணத்தை ஒவ்வொரு நாளும் அவருக்கு அளிக்க வேண்டும். உங்கள் செயல்கள் அவர் திருப்பிரசன்னத்தில் புனிதம் அடைய வேண்டும். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
1 அரசர்கள் 2:1-4,10-12

பதிலுரைப்பாடல்
1 குறிப்பேடு 29:10,11,12

நற்செய்தி
மாற்கு 6:7-13

புனித ப்ளைஸ்
ஆயர், மறைசாட்சி

பிப்ரவரி 2022

**03**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

நீ நெஞ்சுறுதியும் வீரமும் கொண்டவனாக இரு என்று நினைவூட்டப்படுகிறது. முதல் வாசகத்தில் இறைவன் நமக்கு நல்ல பல ஆசீர்வாதங்களைக் கொடுத்துள்ளார். அந்த ஆசீர்வாதங்கள் கிறிஸ்துவை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல பயன்படுகிறது. புனித தெலசால் தனது தியானக் குறிப்பிலே உங்களது வாழ்க்கையே பிறருக்கு நற்செய்தியாக இருக்க வேண்டும் என்கிறார்.

எனவே நமது சொல்லாலும் செயலாலும் பிறருக்கு நன்மைகளைச் செய்வோம். நற்செய்தி அறிவிக்கும் பணி நாம் கடமையாக எடுத்து திறம்பட செய்ய வேண்டும்.

தூய ஆவியானவரின் துணையில்லாமல் நாம் ஒன்றும் செய்ய முடியாது, எனவே ஆவியானவர் நம்மோடு இருந்து நம்மை வழிநடத்த வேண்டுவோம். ஆண்டவரால் அனுப்பப்பட்டவர்கள் அவரது ஆற்றலால் நிரப்பப்படுவர். அவர் வழங்கும் ஆற்றல் தீமைக்கு எதிராக போராடும் உன்னை ஆசீர்வதித்து உன்பேரை பெருமைப் படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் என்கிறார் நம் கடவுள்.



### தெலசாலின் பொன்மொழி

உங்களை பற்றிய அக்கறையும், கனிவும் எனக்கு உள்ளது மற்றும் நான் உங்களுக்காக இறைவனிடம் வேண்டிக் கொள்கிறேன். (கடிதம் – 32)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
சீராக்கு 47:2-17

பதிலுரைப்பாடல்
திபா 67:2-3,5,7-8

நற்செய்தி
யோவான் 12:20-32

புனித அருளானந்தர் மறைசாட்சி

பிப்ரவரி 2022

**04**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

உனது வாழ்வை உன்னிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கும் இளைஞர்களுக்காகக் கொடுக்கத் தயாராக இருக்கின்றாயா?

பலமே வாழ்வு, பலவீனமே மரணம் என்பது வாழ்வின் நிதர்சனம். ஆசிரியப்பணியில் துணிவு, கனிவு, பணிவு ஆகியவையே வெற்றியின் வழிகாட்டிகள். புனித தெலசால் உண்மை வழியில் மாணவர்களை உருவாக்கினார் இறையாட்சியின் மதிப்பீடுகளே அவரின் கனவாக இருந்தது.

உண்மைக்காக எதையும் தியாகம் செய்யலாம் ஆனால் எதற்காகவும் உண்மையைத் தியாகம் செய்யக்கூடாது.

தியாகத்தின் இழப்புகள் எல்லாம் பெரிதல்ல. வேதனைகள் எல்லாம் சாதனைகள். அழுகுரல்கள் எல்லாம் சிரிப்பொலிகள். பலருடைய தியாகம் நம்மை வாழவைக்கின்றது. நம்முடைய தியாகம் நம்மை வாழவைக்கட்டும். நம் வாழ்க்கைப் பயணத்தில் நம்பிக்கையும் துணிவும் நம்மை வழிநடத்த வேண்டும். துணிவு என்பது உடலில் ஓடும் இரத்தம் போன்றது. அது ஓடுவதால் பல காரியங்கள் நடக்கின்றன.



### தெலசாலின் பொன்மொழி

நீங்கள் விரும்பாதவர்களுக்கும் உதவிட
ஒவ்வொரு நாளும்
வாய்ப்பினைத் தேடுங்கள். (கடிதம் - 105)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

எப்போதும் உங்கள் முகங்களில் மகிழ்ச்சி வெளிப்படட்டும்.

இன்றைய நற்செய்தியில் ஓய்வு தேவை என குறிப்பிடப்படுகின்றது. கல்விப்பணியில் நமக்கென்று சிறிது ஓய்வு தேவை. அந்த ஓய்வு நம்மை மீண்டும் புதுப்பிப்பதற்கே!

பல நேரங்களில் நாம் அதிக வேலைப்பளுவில் இருக்கின்றோம். சில நேரங்களில் இறைவனோடு உறவாடுவதற்கும் நம்மை கவனிப்பதற்கும் நேரம் ஒதுக்குவதில்லை. அதனால் நம்மில் கவலைகளும், விரக்திகளும் எழுந்து நம் ஆரோக்கியத்தைக் கெடுத்து விடுகிறது. இறைவனோடு உறவாடும் போது எனது பணிவாழ்வுக்கு உந்து சக்தியாக விளங்குகிறது. அன்பு அனைத்தையும் அழகாகக் காட்டும்.

விடியும் என்ற எண்ணத்தில் உறங்கச் செல்லும் நீ முடியும் என்ற எண்ணத்தோடு எழுந்திரு அனைத்தையும் சாதிக்கலாம்!

முதல் வாசகம்
1 அரசர்கள்: 3:4-13

பதிலுரைப்பாடல்
திபா 119:9,10,11,12,13,14

நற்செய்தி
மாற்கு 6:30-34

புனித ஆகத்தா:
கன்னி,
மறைச்சாட்சி

பிப்ரவரி 2022

# 05

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC



### தெலசாலின் பொன்மொழி

ஒவ்வொரு நாளும் உங்கள் மாணாக்கர்களை நல்வழிப்படுத்துங்கள். அவர்களை கருணையோடு அன்பு செய்யுங்கள். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசாயா : 6:1-8

இரண்டாம் வாசகம்
1 கொரிந்தியர்: 15:1-11

நற்செய்தி
லூக்கா : 5:1-11

பொதுக்காலம்
5-ம் ஞாயிறு

பிப்ரவரி 2022
**06**
ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

நம்பிக்கை சூரிய ஒளியை போன்றது அதை நோக்கி நடக்கும்போது நமது பாரமெல்லாம் நமக்கு பின்னால் நிழலாகச் சென்றுவிடுகிறது.

வாழ்தல் என்பது ஒரு நோக்கத்திற்காகவும் ஒரு குறிக்கோளுக்காகவும் இடைவிடாமல் உயிர்த்துடிப்புடன் தேடக்கூடிய தேடலாகும். ஓடிக்கொண்டே இருந்தால்தான் நதி. தேங்கி விட்டால் அது குளம். குளத்தில் தேங்கிய நீர் நாற்றம் எடுக்கும். பிறருக்கு நோயைப் பரப்பும்.

உழைக்காத மனிதனுக்கு இறைவன் உதவுவதில்லை. இடுக்கண் வருங்கால் அஞ்சாமல் எதிர்கொண்டு துணிச்சலுடன் அதை எதிர்க்க வேண்டும். தடைகளை படிகள் ஆக்கிக்கொண்டால். தடைகள் பொடிப் பொடியாகிவிடும். வாழும் வரை போராடு வழி உண்டு என்றே நீ பாடு.

இளைஞர்களே! நினைத்தால் வாழலாம் என நினைப்பதைத் தவிர்த்து உழைத்தால் தான் வாழலாம் என்பதைத் தெளிவாகக் கொள்ளவேண்டும். தோல்வி அடைய பல வழிகள் இருக்கலாம். ஆனால் வெற்றி அடைய ஒரே வழி உழைப்பு தான்.



### தெலசாலின் பொன்மொழி

நீங்கள் என்ன விசுவாசம் குன்றியவர்களா? நீங்கள் கடவுளின் திருவுளத்தை அர்ப்பணிப்போடு செய்தால், கடவுளின் ஆட்சியை உங்களிலும், உங்களைச் சார்ந்தவர்களிலும் கொண்டு வரச் செய்தால், கடவுள் அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்ய மாட்டாரோ? (MSF)

COMMUNICATION COMMISSION
SECTOR INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

ஆத்ம சக்தியின் கோளாறுதான் பலவிதநோய்களுக்கும் காரணமாகிவிடுகிறது. ஆத்ம சக்தி என்பது நம்மை வழி நடத்தும் இறையாற்றலின் வல்லமையே. நமது ஒவ்வொரு அசைவிலும் இயக்கத்திலும் உணர்வதே ஆகும். எண்ணிய முடிதல் வேண்டும் நல்லவை எண்ணல் வேண்டும். திண்ணிய நெஞ்சம் வேண்டும். தெளிந்த நல்லறிவு வேண்டும். பண்ணிய பாவம் எல்லாம் பரிதிமுன் பனியைபோல நண்ணிய நின்முன் இங்கு நசித்திடல் வேண்டும்.

ஜெபம் கடவுளின் அருளை பிறருக்குக் கொண்டுவர உதவுகிறது இயேசுவை ஜெபத்தால் தொடுவோம் நலம் அடைவோம்.

ஆற்றல்படுத்துதல், நம்பிக்கையூட்டும் சொற்கள், உடனிருப்பு, இம்மூன்றும் குணப்படுத்தும் காரணிகளாக உள்ளன. தேவையில் இருப்பவரைத் தேடிச் சென்று உதவிக்கரம் நீட்டுவதும், துன்புறுவோரின் துயர் நீக்குவதும், ஆதரவற்றவர்களுக்கு ஆதரவாக இருப்பதும் – இயேசுவின் ஆசீர்வாதங்களைப் பகிர்தலுக்குச் சமம்! நீ எப்போதும் இறைப்பிரசன்னத்தில் இருப்பதை நினைவுபடுத்திக் கொள்.

உயிர் எழுத்தும் உயிர் உள்ளவரும்; அன்பு நிறைந்தவர், ஆறுதல் அளிப்பவர், இரக்கம் உள்ளவர், ஈடு இணை இல்லாதவர், உதவி செய்பவர், ஊண் உறக்கம் தருபவர், ஏழையின் தோழனவர், ஐயமின்றி அறம் புரிபவர், ஒற்றுமையை விரும்புவர், ஓடும் நதியாய் வளம் அளிப்பவர்.

முதல் வாசகம்
1 அரசர்கள்: 8:1-7,9-15

பதிலுரைப்பாடல்
திபா 132:6-7,8-10

நற்செய்தி
மாற்கு : 6:53-56

புனித கொன்சாலோ
கார்சியா
மறைசாட்சி - நினைவு

பிப்ரவரி 2022

**07**

திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC



### தெலசாலின் பொன்மொழி

உங்கள் அழைப்பிற்கு நீங்கள் அர்ப்பணிப்போடு இருப்பீர்களேயானால்
நீங்கள் எவ்வாறு பயப்பட முடியும்? உங்களை தன்
உடன் உழைப்பாளர்களாக கொண்டுள்ள கடவுள்
உங்களுக்குத் தேவையான உணவை தர மறுப்பாரோ? (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
1 அரசர்கள்: 8:22-23, 27-30

பதிலுரைப்பாடல்
திபா: 84:2-3,4,9,10,11

நற்செய்தி
மாற்கு : 7:1-13

புனித ஜோசபின் பக்கீதா: கன்னி

பிப்ரவரி 2022

**08**

செவ்வாய்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

நாம் செய்யும் காரியம் வெற்றி அடைய வேண்டுமானால் சுயகட்டுப்பாடும், நல்லெண்ணமும், விடாமுயற்சியும் அவசியம். வெறும் கனவுகள் வெற்றியைத் தராது. இன்றைய நாகரீக மனிதர்கள் பலருக்கு இரண்டு முகங்கள் உண்டு. ஒன்று உண்மை முகம். மற்றொன்று சமுதாயத்தில் சர்வாதிகாரத்தைப் பெறுவதற்காக அணியப்படும் பொய்முகம்.

இப்படிப்பட்ட நிலை பேச்சில் மட்டுமல்ல. வாழ்வதிலும் இருக்கிறது என்பது உண்மை. இதற்குக் காரணம் சரியாக விளக்கப்படாத சட்டங்களும், சரிவரபுரிந்து கொள்ளப்படாத நெறிமுறைகளுமேயாகும்.

வாழ்க்கை என்பது எத்தனை வருடங்கள் வாழ்ந்தோம் என்பதைவிட எத்தனை வருடங்கள் உண்மையாக வாழ்ந்து இருக்கிறோம் என்பதே முக்கியம். வாழ்க்கை ஒரு வரம் வா வாழ்ந்து பார்ப்போம். நீ நினைப்பதை விட நீ உயர்ந்தவன் என்று எண்ணு. மனிதன் கட்டுப்பாட்டை மீறி நடக்கின்ற போது மிருகமாகி விடுகின்றான். கட்டுப்பாடுடன் நடக்கும்போது மனிதன் ஆகின்றான். தன்னை கட்டுப்படுத்திக் கொண்டு பிறருக்காகத் தங்களின் வாழ்க்கையை அர்ப்பணிக்கின்றவர்கள் தெய்வத்தன்மையை பெறுகின்றனர். நீ இறைபிரசன்னத்தில் இருக்கிறாய் என்பதை அடிக்கடி நினைவு கொள் என்கிறார் புனித தெலசால்.



**தெலசாலின் பொன்மொழி**

நீர் உமது கடமைகளை விசுவாசத்துடன் செய்வதை பற்றி நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
1 அரசர்கள்: 10:1-10

பதிலுரைப்பாடல்
திபா : 37:5-6, 30-31, 39-40

நற்செய்தி
மாற்கு : 7:14-23

லசானியப் புனிதர்
புனித மிகேல் ஃபெப்ரெஸ் கோர்டா

பிப்ரவரி 2022
**09**
புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

கபடமற்ற இதயத்தோடு நீ செய்யும் நற்பணிகள் தான், உங்களை மக்களின் இதயத்திற்குள் கொண்டு செல்லும். நம்பிக்கையாளர்களுக்கு அடையாளங்கள் அவசியமில்லை. நம்பாதவர்களுக்கு அடையாளங்கள் உதவுவதில்லை. இறைப்பிரசனத்தின் உயிர் உள்ள அடையாளமாக நாம் அழைக்கப்பட்டுள்ளோம். உன் வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்து விடு. அவரையே நம்பி இரு. அவரே உன் சார்பில் செயல் ஆற்றுவார்.

சாதிக்க வேண்டுமென்றால் அடுத்தவர் மீது நம்பிக்கை வைக்காதே. அது உன்னை அழ வைக்கும் உன் மீது நம்பிக்கை வை உன்னை வாழவைக்கும். இவ்வுலகில் நாம் இறை சித்தத்தை மகிழ்வுடன் நிறைவேற்றும் போது அதைவிட மிகப்பெரிய மகிழ்ச்சி ஒன்றுமில்லை என்கிறார் புனித மிக்கேல். புனித மிக்கேல் தனது லசாலிய அழைத்தல் மூலமும் இறை பணியின் மூலமும் எண்ணற்ற மாணவர்களின் வாழ்வையே மாற்றி இருக்கின்றார். தனது கல்விப் பணியின் மூலம் இறைவனை மகிழ்ச்சிப்படுத்தியதாலும் தனக்கு ஒப்படைக்கப்பட்ட மாணவர்களை நல்வழிப் படுத்தியதாலும் விண்ணில் பிரகாசிக்கிறார்.

நாமும் அவர் வழியில் செல்வோம். இரக்கமுள்ள மனிதர்களின் இதயத்தை, கடவுள் வாழும் இல்லமாக மாறச் செய்வோம்.



### தெலசாலின் பொன்மொழி

உங்கள் நிறுவனத்தில் ஆவியானவரை தன் சொத்தாகக் கொண்டுள்ள சகோதரரை முன்மாதிரியாகக் கொண்டு துணிச்சலுடன் ஊக்கம் பெற்றவர்களாக இருங்கள். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
1 அரசர்கள்: 11:4-13

பதிலுரைப்பாடல்
திபா: 106:34,35,37,40

நற்செய்தி
மாற்கு : 7:24-30

புனித ஸ்கொலாஸ்திக்கா : கன்னி

பிப்ரவரி 2022

**10**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

முயற்சி என்ற ஒன்றை மட்டும் மூச்சு போல சுவாசிப்போம். நம்முடைய வாழ்க்கைச் சரித்திரத்தில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு பக்கங்களாகும். அந்த ஒவ்வொரு பக்கத்தையும் ஒரு சாதனைப் பக்கங்களாகப் பதிய வைப்பதற்கு நாம் எப்போதும் முயற்சி செய்யவேண்டும். பாறையை நகர்த்த விரும்புகிறவன் முதலில் கற்களை நகர்த்த கற்றுக்கொள்ள வேண்டும். முயற்சி என்பது முன்னேறத் துடிப்பவர்களின் மந்திரச்சொல். முயற்சியுடையவர் வாழ்க்கையில் எப்போதும் வசந்தம் வீசும்.

முயற்சியும் பயிற்சியும் உனது இரு சிறகுகளாகட்டும். உலகத்தின் கனவை உழைப்பால் நீங்கள் நிறைவேற்றுகிறீர்கள். நெற்றி மீது எழுதிய விதியின் வரிகளை வியர்வைத் துளிகளால் அழியுங்கள். உள்ளம் மலராத வாழ்வு இருளடைந்தது தான். அறிவுக் கலவாத ஊக்கம் வலுவில்லாதது. அன்பில் கலவாத உழைப்பு பாழானதே. வெறுப்புடன் சமைக்கும் உணவு கசக்கும். உள்ளம் உறவாடாத இசை செவியைத் துன்புறுத்தும் – கலில்கிப்ரன்.



**தெலசாலின் பொன்மொழி**

கடவுளிடம் விசுவாசத்துடனும், நம்பிக்கையுடனும் நீங்கள் கேட்பவற்றை நன்மை நிறைந்த கடவுள் மறுப்பதில்லை என்பதை மனதில் கொள்ளுங்கள். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
1 அரசர்கள்: 11:29-3212-19

பதிலுரைப்பாடல்
திபா: 81:9,10,11,12,13,14

நற்செய்தி
மாற்கு : 7:31-37

லூர்து நகர்
புனித
கன்னி மரியா

பிப்ரவரி 2022

**11**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

புனித லூர்து அன்னை பெருவிழா; புனிதம் உறவில் மலர்கின்றது. உறவுக்கு உயிர் கொடுக்கும் ஆற்றல் தொடுதலுக்கு உண்டு. இறைமகன் இயேசு இப்பூமியைத் தொட்டதால் இப்பூவுலகில் அமைதியும் அன்பும் துளிர்கிறது. இயேசு கிறிஸ்துவால் தொடப்பட்டவர்களே புனிதர்கள்.

இன்றும் தங்கள் வாழ்க்கையால் நம்மைத் தேடுகிறார்கள், இவர்கள் வழியில் நாமும் தடம் பதிப்போம்.

வார்த்தையால், வாழ்க்கையால், அறச்செயல்களால், அன்பு பரிமாணங்களால், இரக்கத்தால், உண்மையால் பிறரைத் தேடுவோம். மாணவர்கள் இதயங்களைத் தொட்டு அவர்கள் வாழ்வை மாற்றும்போது நீயும் அற்புதங்களை நிகழ்த்தலாம் என்கிறார் புனித தெலசால்.

கேட்கவும் பேசவும் முடியாத நண்பர்களுக்காகவும், அவர்களது குடும்பங்களுக்காகவும் மன்றாடி – அவர்கள் மேல் அக்கறை கொண்டு வாழ இன்று நமக்கு ஓர் அழைப்பு.

உடலில் ஊனம் இருந்தாலும் – மனதில் உறுதி இருந்தால் எதையும் சாதிக்கலாம். உறுதியான மனமே உன்னதமான உயர்வான வாழ்வை அமைத்துத் தரும்.



### தெலசாலின் பொன்மொழி

அன்பிற்குரிய சகோதரரே நீங்கள் நோயினால் அடையும் வேதனையை என்னில் மன நிம்மதியை இழந்தோம் இதற்கு ஒரு தீர்வை நாம் தேட வேண்டும். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
1 அரசர்கள்: 12:26-32; 13:33-34

பதிலுரைப்பாடல்
திபா: 106:6-7,19-20,21-22

நற்செய்தி
மாற்கு 8:1-10

புனித அல்பினிட்டா மறைசாட்சிகள்

பிப்ரவரி 2022

**12**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

மனிதன் பறவையைப் போல பறக்கக் கற்றுக் கொண்டான். மீனைப் போல் நீந்த கற்றுக் கொண்டான். ஆனால் மனிதனைப் போல் வாழக் கற்றுக் கொள்ளவில்லை என்கிறார் மார்டின் லூதர்.

வாழ்க்கை எளிமையானது, அதைச் சிக்கலாக மாற்றி இருக்கிறோம். சட்டங்களும், சடங்குகளும், அமைப்புகளும், அதிகாரங்களும், பணமும், பதவியும், முதலிடத்தை ஆக்கிரமிப்பதால் – அன்பு, நட்பு, உறவு புறம் தள்ளப்பட்ட நிலை. வாழ்வு என்பது உறவு கொண்டு வாழ்வது மகிழ்ச்சியோடு வாழ்வது.

என்னால் ஒரு துன்பம் எவர்க்கும் இல்லையென்றால் அதுவே மகிழ்வின் ஆரம்பம். என்னால் ஒரு இன்பம் எங்காவது துளிர்க்கும் என்றால் அதுவே அன்பின் ஆரம்பம். என்னால் ஒரு தீமை என்றேனும் அழிக்கப்பட்டதாயின் அதுவே அமைதியின் ஆரம்பம், என்னால் ஒரு பாதை இன்றேனும் புதுப்பிக்கப்படுமாயின் அதுவே பயணத்தின் ஆரம்பம். என்னால் ஒரு கனவு இந்நாட்டிற்காக காணப்படுமாயின் அதுவே தேச விடியலின் ஆரம்பம்!



**தெலசாலின் பொன்மொழி**

நல்லாசிரியரின் நற்பண்புகளோடு கல்வியின் மூலமாக மாணாக்கர்களின் இதயத்தில் குடிகொள்வோம்
– புனித தெலசால்



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
1 எரேமியா : 17:5-8

இரண்டாம் வாசகம்
1 கொரிந்தியர்: 15:12,16-20

நற்செய்தி
லூக்கா: 6:17,20-26

பொதுக்காலம்
6-ம் ஞாயிறு
- அருளாளர் ஜேம்ஸ் மில்லர் FSC

பிப்ரவரி 2022
**13**
ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டவர் பேறுபெற்றோர். இறைவனை நேசிப்பவருக்கு எல்லாக் காரியங்களும் சாதகமாகி நலமே அதிகரிக்கும் என்கிறார் புனித பவுல். நான் எங்கு சென்றாலும் உன்னையே நினைப்பேன், காண்பேன். இறைவன் நம்பிக்கையின் வடிவம் அவரை நாம் அறிவால் சோதிக்க முடியாது. இந்த நம்பிக்கை இறைவன் மீது மட்டுமல்ல உங்கள் மீதும் ஏற்படவேண்டும். உன்னை விட உனது பிரச்சனைகளைப் பற்றி உன்னைப் படைத்தவனுக்கு நன்றாகத் தெரியும். அவன் மீது முழு நம்பிக்கை வை. அவன் உன்னைக் காப்பான்.

நம்மிடம் வருவது புண்ணியம், பிரிக்க முடியாதது – நட்பு, மறக்க முடியாதது– நன்றி, மிகமிக நல்ல நாள் – இன்று, மிகக் கொடிய நோய் – பொறாமை, மிகப்பெரிய வெகுமதி – மன்னிப்பு, நம்பக்கூடாதது – வதந்தி.

தந்தையோடு கடைவீதிக்குச் செல்லும் குழந்தை, தந்தையின் சுண்டுவிரலைப் பிடித்துச் செல்கிறது. குழந்தைக்குத் தந்தை மீது அதிக நம்பிக்கையைத் தருகிறது. அதேபோல்தான் இறைவனிடம் நாம் வைக்கும் நம்பிக்கைக்கு அடிப்படையும், அவர் எப்படிப்பட்டவர் என்பதை நாம் அறிந்து கொள்வதில் தான் இருக்கிறது.



### தெலசாலின் பொன்மொழி

உங்களின் ஆர்வமானது, உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்காக உங்கள் வாழ்க்கையையே தரும் அளவிற்கு இருக்க வேண்டும். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
யாக்கோபு : 1:1-11

பதிலுரைப்பாடல்
திபா : 119-67,68,71,72,75,76

நற்செய்தி
மாற்கு: 8:11-13

புனிதர்கள்
சிரில் மற்றும்
மெத்தடிஸ்

பிப்ரவரி 2022
**14**
திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

துணிவு என்பது உனக்கு இருக்க வேண்டிய அடிப்படையான சக்தி மனிதனுக்கு வேண்டிய முதலாவது குணம் துணிவு தான். ஏனெனில் அது மற்ற குணங்களுக்கு எல்லாம் உத்தரவாதம் அளிக்கக் கூடியது. அதிர்ஷ்டம் என்ற சொல் எப்போதும் துணிச்சல் உள்ளவர்களின் பக்கமே நிற்கும் – சீன பழமொழி. உச்சிமீது வான் இடிந்து விழுகின்ற போதிலும் அச்சமில்லை என்று கூறும் அளவுக்கு நமக்கு வேண்டிய மனத்துணிவுதான் நம் செயல் சிறக்க உதவும். துணிவுடன் செயல்படும் மனம் தளராமல் எதையும் சாதிக்கும்.

நான் சாம்பலாகப் போனாலும் போவேனே தவிர புழுதியில் இருக்க விரும்ப மாட்டேன். நான் தீப்பிடித்து பிரகாசமாக எரிந்து போனாலும் போவேனே தவிர ஒரு சாதாரண கோளாக இருக்க மாட்டேன். மனித வாழ்வின் நோக்கம் உயிரோடு இருப்பது மட்டுமல்ல உயிர்ப்புடன் இருப்பது. அதிகநேரம் இருக்காது அதிர்ஷ்டம். நீண்டதூரம் வராதது சிபாரிசு. எல்லாப் பொழுதிலும் கிட்டாது உதவி. ஆனால் எப்போதுமே ஜெயிக்கும் தன்னம்பிக்கை!

**தெலசாலின் பொன்மொழி**
நான் உங்களுக்காக ஜெபிக்க தவறுவதில்லை என்பதில் நீங்கள் உறுதியாக இருக்கலாம்.
[கடிதம் 27]





# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

உனது பணியைக் குறித்து பெருமை அடையுங்கள் என்கிறார் புனித தெலசால். கவலை ஒரு மனநோய். அது நாசம் விளைவிக்கும் நஞ்சு போன்றது. கவலை நாளைய துயரங்களை அழிப்பதில்லை. இன்றைய வலிமையை அழித்து வருகின்றது. உன் கவலைகள் மீது செலுத்தும் கவனத்தை, உன் கடமை மீது செலுத்தினால் வெற்றி பெறுவது உறுதி. கவலை ரத்த ஓட்டத்தையும் நரம்பு மண்டலத்தையும் பாதிக்கிறது. எதிர்கொள்ளும் திறன் இருந்தால் போதும் உலகமே உன் எதிரில் திரண்டாலும் உன்னை ஒன்றும் செய்ய முடியாது.

சுடும் வரை நெருப்பு, சுற்றும் வரை பூமி, போராடும் வரை மனிதன். கவலைப்படுவதால் மட்டும் பிரச்சனை தீராது. கவலைக்கு மூலக் காரணத்தை கண்டுபிடி. பிரச்சனைகளே உன்னை உயிர்த்துடிப்போடு வைத்திருக்கிறது. சாந்தமும் மன அமைதியும் மட்டுமே மனிதனுடைய பிரச்சனையைத் தீர்க்கும் வாயில்கள். எல்லாப் பிரச்சனைகளுக்கும் நம்மிடம் உள்ள எதிர்பார்ப்பு தான் காரணம். ஒருவர் பிறரிடமிருந்து எதையும் எதிர்பார்க்கவில்லை என்றால் அனைவரும் செல்வர்கள். எதிர்பார்ப்பும் ஏமாற்றமும் உடன்பிறப்புகள் ஒன்றைத் தொடர்ந்தே மற்றொன்று பயணிக்கும்.



முதல் வாசகம்
யாக்கோபு : 1:12-18

பதிலுரைப்பாடல்
திபா : 94:12-13, 14-15, 18-19

நற்செய்தி
மாற்கு: 8:14-21

புனித ஃபாஸ்டினுஸ் ஜோவிட்டா

பிப்ரவரி 2022
**15**
செவ்வாய்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

**தெலசாலின் பொன்மொழி**
கடவுள் உங்கள் இதயங்களில் வருவதற்கான வழியை தயார் செய்து கொள்ளுங்கள். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
யாக்கோபு : 1:19-27

பதிலுரைப்பாடல்
திபா: 15:2-3,3-4,4-5

நற்செய்தி
மாற்கு: 8:22-26

புனித ஒனேசிமஸ்

பிப்ரவரி 2022

**16**

புதன்கிழமை

இன்றைய இளைஞர்களுக்கு நல்ல ஆசிரியர்கள், அருட்சகோதரர்கள் மற்றும் கண்ணில் தெரிகின்ற காவல் தூதர்கள் மிகத் தேவை. எப்போதும் சிரித்த முகத்துடன் இருங்கள். மகிழ்ச்சியும் வீரமும் முகத்திற்கு அழகு. கோபப்படும்போது நாம் நரகத்தில் வாழ்கிறோம். அன்பில் மூழ்கும்போது சொர்க்கத்தில் நுழைந்து விடுகிறோம். எண்ணத்தில் அழகு இருப்பின் அது இதயத்தில் சேரும். இதயம் அழகு பெறும் போது, அது சொல் செயல் வடிவில் வெளிவரும்.

தன்னையே கொல்லும் சினம். கேட்பதற்கு விரை, பேசுவதற்கு நிதானி, கோபத்திற்கு சுணங்கு, பதறாத காரியம் சிதறாது. கோபத்தை வெளிகாட்டுவது குளவிக் கூட்டில் கல் எறிவதற்கு ஒப்பாகும் என்கிறது ஒரு பழமொழி. 10 நிமிடம் நீ கோபத்தில் இருக்கும்போது 600 வினாடி ஆனந்தத்தை இழந்து விடுகிறாய். சந்தோசம் இருக்கும் இடத்தில் வாழ நினைப்பதைவிட நீ இருக்கும் இடத்தில் சந்தோஷத்தை உண்டாக்கு. உன் வாழ்க்கையில் நிறைவு இருக்கும், உன் மனம் மகிழ்ச்சியால் நிரம்பும்.

சிலரிடம் பேசினால் நிம்மதி சிலரிடம் பேசாமல் இருந்தால் நிம்மதி.



**தெலசாலின் பொன்மொழி**

எவ்வளவு காலம்தான் ஏசு உங்கள் இதயங்களில் நுழைய கதவைத் தட்டிக் கொண்டிருப்பாரோ (MSF)

COMMUNICATION COMMISSION SECTOR INDIA

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

உன்னுடைய மாணவர்கள் இயேசுவின் மறு உருவங்கள் என்கிறார் தெலசால். நீ பிறருக்கு ஆசீர்வாதமாய் இருப்பாய்; உன்னால் முடிந்ததை பிறருக்குச் செய். மனதாலும் பிறருக்கு கேடு நினையாதே; எல்லோரும் நன்றாய் வாழ வேண்டும் என்ற பரந்த எண்ணம் கொள். தெரியாதவர், வேண்டியவர், வேண்டாதவர் எனப் பாராதே! "யாதும் ஊரே! யாவரும் கேளிர்", இதுதான் இன்றைய வேதம். பிறரைத் தூக்கிவிட குனிபவனே உலகில் உயர்ந்த மனிதன் என்கிறார் ஆலிஸ்டர்.

உலகம் என் நாடு. நன்மை செய்வதே என் சமயம். எல்லோரும் ஓர் தாய் மக்கள் என்போம். பொல்லாதவன் என்று என்னை சொல்வார்கள் அதனாலென்ன? புனிதமானவன் என்றும் சொல்வார்கள் அதனாலென்ன? கல்லாத அறிவிலி என்றும் சொல்வார்கள் அதனாலென்ன? கலைஞன் இவன் என்றும் சொல்வார்கள் அதனாலென்ன? சொல்லக்கூடாத வசைமொழிகளால் திட்டினாலும் அதனாலென்ன? இவற்றால் நான் பூரிப்படையாமலும் மனம் தளராமலும் வாழ்வின் எல்லா நாளிலும் ஒரே தன்மையாக இருக்க வேண்டும் என்கிறார் உமர்கய்யாம்.

முதல் வாசகம்
யாக்கோபு : 2:1-9

பதிலுரைப்பாடல்
திபா: 1-2,3-4,5-6

நற்செய்தி
மாற்கு: 8:27-33

மரியாயின் சபையை நிறுவிய எழுவர்

பிப்ரவரி 2022

**17**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

**தெலசாலின் பொன்மொழி**

உங்கள் சக மனிதருக்கு நீங்கள் கொண்டுள்ள மரியாதை, பணிவு, மென்மையாக பழகும் குணம் எப்போதும் உங்கள் நடத்தையில் வெளிப்படட்டும். (Rule)





# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

உன் முதன்மைப் பாடம் வேதாகமம் அதுவே உன் வாழ்வின் வழிகாட்டி, நன்மை செய்யவே நாம் படைக்கப்பட்டிருக்கிறோம். இதனை மறவாதீர் முடிந்தவரை பிறருக்கு நன்மை செய்து வாழ். நல்ல வேலை செய்ய முதலில் நல்ல எண்ணங்கள் வேண்டும். நம் மனம் தூய்மையானதாக இருக்க வேண்டும். கெட்ட எண்ணங்கள் மீது கவனம் வைக்க வேண்டாம். கெட்ட எண்ணங்கள் மிகவும் ஆபத்தான திருடர்கள் என்கிறார் அன்னை. எண்ணத்தில் தூய்மை இருந்தால் மட்டுமே செயலில் தூய்மை அடைய முடியும்.

வீட்டை வாங்கலாம், இல்லத்தை வாங்க முடியாது. கடிகாரத்தை வாங்கலாம், நேரத்தை வாங்க முடியாது. படுக்கை வாங்கலாம், உறக்கத்தை வாங்க முடியாது. புத்தகத்தை வாங்கலாம், ஞானத்தை வாங்க முடியாது. உணவை வாங்கலாம், ஜீரணத்தை வாங்க முடியாது. ஆயுதங்களை வாங்கலாம், வீரத்தை அடைய முடியாது. மூக்குக் கண்ணாடி வாங்கலாம், பார்வையை வாங்க முடியாது. அமைதியான சூழ்நிலையை உண்டாக்கலாம், ஆனால் மன சாந்தியை வாங்க முடியாது. இவர்கள் ஏன் இப்படி என்பதைவிட இவர்கள் இப்படித்தான் என்று நினைத்து விலகி விடுவது நிம்மதி.

முதல் வாசகம்
யாக்கோபு : 2:14-24,26

பதிலுரைப்பாடல்
திபா:112:1-2,3-4,5-6

நற்செய்தி
மாற்கு: 8:34-9:1

சூரியாகோஸ்
எலியாஸ்
சாவாரா

பிப்ரவரி 2022
**18**
வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC



**தெலசாலின் பொன்மொழி**
எப்பொழுதும் நேர்மையாகவும், கவனமாகவும் மற்றவர்களிடம் கனிவுடனும் இருங்கள். (Rule)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை

## சிந்தனைத் துளிகள்

நம்பிக்கையின் ஒளியில் உன் பார்வையும் பழக்கங்களும் வித்தியாசப்படட்டும்.

நாம் அனைவரும் கடவுளைப் பின்பற்ற அழைக்கப்பட்டு உள்ளோம். ஆனால் நம்மில் இருக்கும் சுயநலத்தைக் கலைந்தால் தான் நாம் அவரின் அருளால் நிரப்பப்படுவோம். நாம் இயேசுவிற்குள் இணைந்தோம் என்றால் முழுமையாக அவரில் இணைய முடியும் அப்போது தான் நம்மில் மாற்றம் ஏற்படும். லசாலியப் பணி வாழ்விலே நாம் இறைபிரசன்னத்தில் வாழும்போது நம் குழந்தைகள் இயேசுவின் அன்பை, அருளை சமாதானத்தை பெறுவார்கள் இயேசுவை முழுமனதோடு ஏற்றுக்கொள்பவர்கள் வாழ்வில் நிம்மதி.

அன்பின் இறைவா, உம்மிலே நாங்கள் அடைந்து உம் சித்தப்படியே நாங்கள் மாற்றம் பெற அருள்தாரும்.

நாங்கள் மாற்றம் பெற்றால்தான் உமது அன்பை பிறரோடு பகிர்ந்து கொள்ள முடியும். புனித பேதுருவைப் போல அடுத்தவர்களின் தேவைகளை உணர்ந்து பூர்த்தி செய்ய பலன் தாரும். நீரே எமது நம்பிக்கையும், பலமும், ஒளியுமாக இருப்பீராக.

நீ! நீயாக மாறுவதே நிரந்தர மாற்றம்.

முதல் வாசகம்
யாக்கோபு : 3:1-10

பதிலுரைப்பாடல்
திபா:112:1-2,3-4,6-7

நற்செய்தி
மாற்கு: 9:2-13

புனித
கொன்ராா்டு
பியாசென்சா

பிப்ரவரி 2022
**19**
சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

### தெலசாலின் பொன்மொழி

தந்தையாகிய கடவுளின் வெகுமதியை உங்கள் எண்ணங்களால் போற்றிப் புகழுங்கள். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
1 சாமுவேல்: 26:2,7-9,12-13,22-23

இரண்டாம் வாசகம்
1 கொரிந்தியர் : 15:45-49

நற்செய்தி
மாற்கு: 9:2-13

பொதுக்காலம்
7-ம்
ஞாயிறு

பிப்ரவரி 2022
**20**
ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

## சிந்தனைத் துளிகள்

நண்பனும் எதிரியும் ஒன்றுதான். இருவருமே உன்னைப் பற்றி நன்கு அறிந்தவர்கள்.

நண்பன் உன் நல்ல குணத்தை மிகைப்படுத்தி, தீயக் குணங்களை குறைவு படுத்தி உறவாடுவான். எதிரியோ உனது நல்ல குணங்களைக் குறைவு படுத்தி, தீய குணங்களை மிகைப்படுத்தி உன்னை வாழ்க்கைப் போராட்டத்துக்கு தூண்டுகிறான். பகைவர்கள் உனது வெளிப்புற மன சாட்சிகள். இரண்டு அணுகுண்டு போட்டு நாசமாக்கிய எதிரியைக் கண்டு, என்ன செய்தது ஜப்பான்? தன் பலத்தை வலுப்படுத்திக் கொண்டு எதிரியை பொறாமைப்பட செய்தது.

எதிர்த்தே உன் வாழ்க்கையை இயங்க வைக்கிறது. எதிர்ப்பை சமாளிக்கும் போது உன் விழிப்புணர்ச்சி அதிகமாகிறது. இறைவா! அமைதியின் தூதனாய் என்னையே மாற்றிடு!. துயரங்களை ஏற்றிட நல் மனதை கொடு!.

நீ மற்றவர்களுக்குத் தகுந்த பரிசைக் கொடுக்க விரும்புவாயானால் உனது பகைவனுக்கு அளிக்கத் தகுந்த முதன்மையான பரிசு மன்னிப்பு. உன் குழந்தைக்கு நல்ல நடத்தையைப் பரிசளி. எல்லா மனிதர்களுக்கும் தாராளமாக்கிக் கொடு.



**தெலசாலின் பொன்மொழி**
உங்கள் பணிகளில் பெருமைக்கு ஒருபோதும் இடம் தராதீர்கள் ஏனெனில் அது எந்தவொரு நற்பயனையும் விளைவிக்காது. (கடிதம் 99)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
யாக்கோபு 3:13-18

பதிலுரைப்பாடல்
திபா 19: 7,8,9,14

நற்செய்தி
மாற்கு 9:14-29

புனித
பீட்டர் தமியான்

பிப்ரவரி 2022

**21**

திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

ஆண்டவரின் நியமங்கள் சரியானவை. இதயத்தை மகிழ்விப்பவை. சகிப்புத் தன்மையும் பொறாமையும் இரட்டைப் பிறவிகள். அவை இல்லாத மனிதர்கள், அவர்கள் கடந்து செல்வதற்கு மேம்பாலம் இருந்தும் அதைத் தவிர்த்துவிட்டு தண்டவாளத்தின் குறுக்கே கடந்து விபத்துக்கு ஆளாகிறார்கள். மாணவர்கள் படிக்கும் நேரத்தில் எத்தனையோ தொல்லைகள் வரும். தெருவில் ஊர்த் திருவிழாவுக்காக ஒலிபெருக்கிகள் கூச்சலிடும். இவற்றையெல்லாம் தவிர்த்துக் கொண்டு படித்தால் தான் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சியடைய முடியும்.

ஓ! இறைவா!

ஆறுதல் பெறுவதற்குப் பதில் ஆறுதல் அளிப்பவனாக என்னை மாற்றி. பிற மனிதர்களை தெரிந்து கொள்வதற்கு பதிலாக, புரிந்து கொள்பவனாக என்னை ஆக்கும். நேசிக்கப்படுவதைக் காட்டிலும் நேசிப்பவனாக ஆக்கும். எப்போதும் கொடுக்கும் மனிதனாக என்னை மாற்றும்.



**தெலசாலின் பொன்மொழி**

பிறருடன் கனிவுடனும், அக்கறையுடனும், பழகுங்கள். இல்லையெனில் அமைதியாக இருங்கள். (MSF)

COMMUNICATION COMMISSION
SECTOR INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
1 பேதுரு: 5:1-4

பதிலுரைப்பாடல்
திபா : 23:1-3,4,5,6

நற்செய்தி
மத்தேயு: 16:13-19

பேதுருவின் தலைமைப் பீடம்

பிப்ரவரி 2022

**22**

செவ்வாய்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

கற்பிப்பவர்களுக்கு முன் மாதிரியாக இருங்கள்.

தன் கருத்தை என்றும் மாற்றிக் கொள்ளாத மனிதன் தேங்கிய தண்ணீர் போன்றவன். அதில் அழிவுப் பூச்சிகள் வளர்கின்றன என்கிறார் வில்லியம்.

ஐம்புலன்களும் உன் கட்டுபாட்டில் தான் இருக்க வேண்டும். மனம் செல்கிற வழியில் நீ சென்றால் அது புதைகுழி நோக்கி உன்னை அழைத்துச் செல்லும். நேர்மையும் தூய்மையும் எளிமை பெற்றெடுத்த இரட்டைக் குழந்தைகள். எந்த சூழ்நிலைகளிலும் செய்த தவறுகளை நியாயப்படுத்தாதீர்கள். நம் லசாலிய நிறுவனங்களில் கருத்துச் சுதந்திரம் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

அன்பு இறைவா! உமது ஒளியின், அன்பின் இரக்கத்தின் கருவியாக எம்மை மாற்றும். சமாதானத்தின் வழியைக் காட்டியருளும். கருத்துச் சுதந்திரத்தின் மூலமும், உரையாடல்களின் மூலமும் பிறரைப் புரிந்து கொள்ள அருள் தாரும். மத நல்லிணக்கமும், மத சுதந்திரமும் எங்கள் நாட்டிற்கு மிகவும் தேவை என்பதை உணரச் செய்தருளும். நீ எவ்வளவு கற்றாய் என்பது பெரிதல்ல கற்ற வழியில் எவ்வளவு தூரம் நடக்கின்றாய் என்பதே பெரிது.



**தெலசாலின் பொன்மொழி**

நீங்கள் திறமைகளையும், ஆசீர்வாதங்களையும் கடவுளிடம் இருந்து பெற்றுள்ளீர்கள். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

ஜெபம் அனைவரையும் ஒன்றிணைக்கிறது. கிறிஸ்துவைப் பலரும் பல வழிகளில் பின்பற்றுகிறார்கள். சில சமயங்களில் நம் பார்வை குறுகிய கண்நோட்டத்தைக் கொண்டிருக்கலாம். நன்மை செய்ய ஒருவருக்குத் தெரிந்திருந்து அதைச் செய்யாவிட்டால் பாவம். நன்மையைச் செய்யவே நாம் படைக்கப்பட்டிருக்கிறோம்.

முடிந்தவரை பிறருக்கு நன்மைச் செய்தே வாழ். அதுதான் இனிய வாழ்வு. இன்று செய்யக் கூடியதை நாளைக்கென்று ஒதுக்கி வைக்காதே. நாளை என்பது ஒரு நம்பிக்கை. நிகழ்காலம் என்பது கடந்த காலத்தின் கல்லறை. வரும் காலத்தின் கருவறை.

நாளை நாளை என்று சோம்பேறிகள் தான் சோர்வடைவார்கள். இன்றைய நாளின் அருமை உணர்ந்தவர்கள் சதா உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். வாழ்க்கை என்பது நேரத்தால் ஆனது என்கிறார் பிராங்களின். வாழ விரும்புகிறவன், வாழ நினைக்கிறவன், வாழ்வை ரசிக்கிறான். நேரத்தை அதன் சிறப்பை முதலில் அறிவார்கள். நீ காலத்தை போக்கவும், இங்கு காலத்தோடு போகவும் நீ இங்கு வரவில்லை. நீ காலத்தை நிலைநிறுத்த வந்திருக்கின்றாய். நகரும் பொழுதுகள் நமக்காக விடியட்டும். நம்பிக்கையோடு அடியெடுத்து நட.

முதல் வாசகம்
யாக்கோபு : 4:13-17

பதிலுரைப்பாடல்
திபா: 49:1-2,5-6,7,8,9,10

நற்செய்தி
மாற்கு : 9:38-40

புனித போலிக்கார்ப்பு : ஆயர், மறைச்சாட்சி

பிப்ரவரி 2022

**23**

புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC



### தெலசாலின் பொன்மொழி

நீங்கள் உங்களையே ஜெபத்தில் முழுமையாக அர்ப்பணியுங்கள். அதுவே உங்கள் பணியை சிறப்புடன் செய்ய உதவும்.
(MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

நீங்கள் உப்பின் தன்மையைக் கொண்டிருங்கள். உன் வாழ்க்கையின் முன்னேற்றம், வெற்றி, உயர்வு எல்லாமே உன் எண்ணங்களைக் கொண்டுதான் உருவாகிறது. உன் வாழ்க்கையைச் செதுக்கும் ஆற்றல் கொண்டவை உன் எண்ணங்கள் மட்டுமே. உனது எண்ணம் போல் வாழ்வு. எனவே எல்லாச் சூழ்நிலைகளிலும் சிறந்ததையே எண்ணு.

பீரங்கியை விட அதிக சக்தி வாய்ந்தது எண்ணங்களே. எண்ணத்தால் மன வலிமை பெறுகிறாய். எதை எண்ணுகிறாயோ அதுவாக ஆகிறாய் என்பது வேதாகம வரிகள்.

உப்பின் தன்மை நிரந்தரம். விசுவாசம் ஆயுள். சுத்திகரிப்பு, மாணவர்கள் உப்பின் பண்பினைப் பெற்றால் தான் பிரகாசிக்க முடியும். சாதனை புரிந்தவர்கள் எல்லாம் நேரத்தைப் பயன்படுத்தியவர்களே. காலத்தை உன் பணத்தைப் போல் எண்ணி செலவு செய். ஒவ்வொரு நிமிடத்தையும் உழைப்பில் முதலீடு செய்து முன்னேற்றப் பாதையில் செல்.

முதல் வாசகம்
யாக்கோபு : 5:1-6

பதிலுரைப்பாடல்
திபா : 49:13-14, 14-15, 16-17, 18-19

நற்செய்தி
மாற்கு : 9:41-50

ஆர்லஸ் நகர் புனித செசாரியஸ்

பிப்ரவரி 2022

**24**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC



**தெலசாலின் பொன்மொழி**

உங்கள் பள்ளி சிறப்பாக இயங்க அக்கறையுடன் செயல்படுங்கள். [கடிதம் 42]



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர். சமூகத்தின் முதல் அங்கம் குடும்பம். வாழ்க்கையின் முதல் தளம். முதல் நிலம் குடும்பம். அதில் அன்பு விதைக்கப்பட வேண்டும். பிள்ளைக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் நல்லொழுக்கம். குடும்பம் என்பது குழந்தையில் இருந்து தான் ஆரம்பமாகின்றது.

குடும்பம் :

அன்பின் பிறப்பிடம்

மகிழ்ச்சியின் இருப்பிடம்

பாசத்தின் வளர்ப்பிடம்

பக்குவத்தின் காப்பியம்

குடும்பம் என்பது கடவுள் நமக்காகப் பூமியில் ஏற்பாடு செய்திருக்கும் சொர்க்கம். அதை சொர்க்கமாக்குவதும் நரகமாக்குவதும் நம் கையில்தான் இருக்கிறது. குடும்ப வாழ்க்கை என்பது நான்கு சுவருக்குள் முடிந்து போகும் விஷயமல்ல. குடும்பங்களில் விதைக்கப்படும் செயல்கள் சமூகத்தில் அறுவடையாகும்.

மனித நேயம் மனதில் நிரம்பி இருக்கும் மக்கள் என்றும் சமூகத்தோடு இணைந்திருப்பார்கள். சமுதாய பார்வையில் சக மக்களோடு சங்கமமாவார்கள்.



முதல் வாசகம்
யாக்கோபு : 5:9-12

பதிலுரைப்பாடல்
திபா : 103:1-2, 3-4, 8-9, 11-12

நற்செய்தி
மாற்கு : 10:1-12

புனித
ராணி மரியா
வட்டலிஸ்

பிப்ரவரி 2022

**25**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

**தெலசாலின் பொன்மொழி**

ஒவ்வொரு கிறிஸ்தவனும் நற்செய்தியின்படி வாழவேண்டும். பிறருக்குரிய மதிப்பை தந்து அவர்களை கடவுளின் குழந்தைகளாகவும் கிறிஸ்துவின் சகோதரர்களாகவும், கருதவேண்டும். (Rule)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை

## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
யாக்கோபு : 5:13-20

பதிலுரைப்பாடல்
திபா : 141:1-2,3,8

நற்செய்தி
மாற்கு : 10:13-16

புனித
மெக்டைட் : கன்னி

பிப்ரவரி 2022

**26**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

தாயைப் போன்ற கனிவும் தந்தையைப் போன்ற கண்டிப்பும் மிக அவசியம் என்கிறார் தெலசால். குழந்தைகள் இறையரசில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. நமது பெற்றோர்கள் நாம் குழந்தைகளாய் இருந்த போது நம்மை வாழ வைத்த தெய்வங்கள். இன்று சிறுபிள்ளைகளை இயேசுவிடம் வராதபடி தடுக்கும் வேலையை பெற்றோரே செய்கின்றனர். முன்பு பிள்ளைகளை கோவிலுக்கு அனுப்பினார்கள். ஆனால் இன்று எழுந்ததும் அவர்களை சிறப்பு வகுப்புக்கு அனுப்புகின்றனர். இன்னும் பல பெற்றோர்கள் பிள்ளைகளை மறைக்கல்வி ஞாயிற்றுக்கிழமை சிறப்பு வகுப்புக்கு அனுப்புவதில்லை.

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று.

குழந்தை பாதுகாப்புப் என்பது குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் வன்முறை. சுரண்டல், தீங்கிழைத்தல் மற்றும் புறக்கணிப்பு ஆகியவற்றிலிருந்து அவர்களை பாதுகாத்து உடல், மன வளர்ச்சி பெற்று ஆரோக்கியமாக வாழ நாமும் செயல்படவேண்டும். குழந்தைகள் தனித்துவம் வாய்ந்தவர்கள்.

குழந்தைகளின் மனதில் பிரபஞ்சத்தை நேசிக்கச் செய்யும் வல்லமை கொண்டது அதன் விலாசம் எல்லையற்றது. குழந்தை மனது பசுந்தளிருக்கு ஒப்பானது.

**தெலசாலின் பொன்மொழி**

நற்செய்தியை விரும்பி வாசியுங்கள், அவற்றை உங்கள் வாழ்க்கையில் பயிற்சி செய்யுங்கள் (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
சீராக் : 27:4-7

இரண்டாம் வாசகம்
1 கொரிந்தியர் : 15:54-58

நற்செய்தி
லூக்கா : 6:39-45

பொதுக்காலம்
8-ம்
ஞாயிறு

பிப்ரவரி 2022
**27**
ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

பிறரின் குறைகளையும், பலவீனத்தையும் நாம் எளிதாக தீர்ப்பளிக்கின்றோம். ஆனால் நமது குறைகளை நாம் மறைத்து / மறந்து விடுகிறோம். இன்றைய வாசகங்கள் நம்மை பணிவுடன் பிறரை உற்று நோக்க, அன்பு செலுத்த அழைப்பு விடுக்கிறன்றன.

இயேசுவே! நீர் என்னைத் தொட்டுக் குணப்படுத்தும். உமது பார்வையை என் மீது விழச்செய்யும். என் உள்ளம் அறிந்து நான் செயல்படுவது போல், உலகத்தார் உள்ளம் அறிந்து செயல்படுவதற்கான வல்லமையைத் தாரும். அடுத்தவர்களுக்கு நன்மை செய்வது கடமையல்ல. அது ஒரு சந்தோஷம். மகிழ்ச்சியின் ரகசியம் ஆகும். நல்ல நண்பர்களை அதிகமாக பெற்றவன் வலிமை மிக்க படையை பெற்றவர்க்கு சமமாகும். நல்ல திறமை உடைய மனிதருக்கு நண்பர்கள் அதிகம்.

வாழ்வின் வார்த்தையை பற்றிக்கொள்ளுங்கள். உலகின் ஒளிரும் சுடர்களாகத் துலங்குவீர்கள்.



**தெலசாலின் பொன்மொழி**

கடினமான நேரங்களில் மன உறுதியுடன் இருங்கள். (கடிதம் 90)

COMMUNICATION COMMISSION
SECTOR INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
1 பேதுரு : 1:3-9

பதிலுரைப்பாடல்
திபா : 111:1-2,5-6,9-10

நற்செய்தி
மாற்கு : 10:17-27

அலெக்சாந்திரிய நகர மறைசாட்சிகள்

பிப்ரவரி 2022

**28**

திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. ஹெல்டன் FSC

கொடுப்பதில் இன்பம். பகிர்தல் ஒரு தெய்வீகப் பண்பு. அன்பின் மற்றொரு பெயர் பகிர்தல். ஐயம் இட்டு உண். பிறருக்குத் தந்துவிட்டு எடுத்துக்கொள். (உணவை, அறிவை, செல்வத்தை). நாம் ஒரு நோக்கத்திற்காக படைக்கப்பட்டுள்ளோம். இறைவன் நமக்கு ஒரு திட்டத்தை வைத்திருக்கின்றார். கிறிஸ்தவ சமூகம் ஒரு பகிர்வு சமூகம். பகிர்தலினால் எத்தனையோ பிரச்சனைகளை நாம் தீர்க்கலாம்.

புவி, அளவுக்கு மீறி வெப்ப மடைந்து வருவதன் காரணம் காடுகளை அழிப்பது. நிலப்பயன்பாடுகளில் மாற்றங்களைக் கொண்டு வந்தது தான். பொருளாதாரத்திற்கும், ஆன்மீகத்துக்கும் உள்ள அடிப்படை உறவு, அன்பு, பகிர்தல், இரக்கம், எளிமை, கரிசனை, அக்கறை போன்ற ஆன்மீக சமத்துவ பண்புகளும் நீதி நியாய உரிமைகள் போன்றவைகள் அடங்கிய அறநெறியே காரணம்!

வாழ்வில் இறைவார்த்தையை பற்றிக்கொள்ளுங்கள். உலகின் ஒளிரும் சுடர்களாகத் துலங்குவீர்கள். பூவுலகை பாதுகாக்க வேண்டிய முயற்சியில் நம் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு.



### தெலசாலின் பொன்மொழி

கடவுளின் அன்பிற்காக கடினமாக உழையுங்கள் (கடிதம் 98)

## இம்மாத லசாலிய புனிதர்



### புனித மிக்கேல் பெஃப்ரஸ் கோர்டேரோ

"அவர் எவ்வளவு பரிசுத்தமானவராக இருந்தாரோ அந்தளவிற்கு கற்றவராகவும் இருந்தார்", என்ற போற்றுதலுக்கு உகந்தவர். அருட்சகோதரர் புனித மிகயேல். 1854 நவம்பர் 7 ஆம் நாள் தென் அமெரிக்காவிலுள்ள ஈக்வடார் என்ற நாட்டில் பிறந்தார். அருட்சகோதரர்களின் பள்ளியில் படித்து வந்த அவர் அவர்களுடைய வாழ்க்கை முறையினால் கவரப்பட்டு 1868, மார்ச் 24 ஆம் நாள் ஒரு அருட்சகோதரனாக இறைப்பணியில் தன்னை ஈடுபடுத்தினார்.


நேர்மறையான சிந்தனையுடன் ஆசிரியப்பணியில் தலைசிறந்த ஆசிரியராக மாறினார். தன்னுடைய நாட்டிற்கு ஸ்பனிய இலக்கணம் குறித்து பாடநூல்களை எழுதி பகழ் பெற்றார். ஸ்பெயின், வெனிசுலா, ஈக்வடார் தேசிய கல்விக் கழகத்திற்கு பணியாளராக தேர்வு செய்யப்பட்டார்.

ஒரு எளிமையான, இனிமையான முன் உதாரணம் மிக்க இவருடைய வாழ்க்கை முறை ஒரு அருட்சோகதர குழுமத்தின் பொக்கிஷமாக கருதப்பட்டது. "நீங்கள் எப்பொழுதும் கடவுளுக்காக மனமுவந்து பணியாற்றுங்கள்" என்பது இவரது வாழ்வின் தாரக மந்திரமாக இருக்கிறது.

அதுவே அவரை 1984 அக்டோபர் 24 ஆம் நாள் புனித நிலைக்கு உயர்த்தியது.

**இவரது குழந்தைப் பருவத்தின் புதுமை :**

இவர் பிறக்கும் போதே கால் ஊனத்துடன் பிறந்தார். அவருடைய 5–வது வயதில் அன்னை கன்னி மரியாளின் காட்சியை பெறும் பாக்கியம் பெற்றார். அன்னை மரியாளுடைய அனுகிரகத்தால் அவருடைய கால் ஊனத்தில் இருந்து குணம்பெற்று பிற குழந்தைகளை போல எழுந்து நடக்க ஆரம்பித்தார்.



இம்மாத லசாலிய புனிதரின் திருவிழா

**புனித மிக்கேல் பெஃப்ரஸ் கோர்டேரோ**

**07.11.1854 - 09.02.1910**

## ஜெபம்

இறைவனே எம் தகப்பனே,

புனித மிகேல் அவரது முன்மாதிரிகையின் வழியாக, நாங்கள் எம் ஆசிரியராம் இயேசு கிறிஸ்துவை நெருக்கமாக பின்பற்ற எம் அகத்தினை தூண்டும். உமது அன்பினில் இன்பமாக வாழவும் எமது வாழவினில் உமது திருப்பிரசன்னத்தை நாள்தோறும் நினைவுக் கூறுவதில் வளரவும் எமக்கு அருள் புரியும். இவரைப்போல் இள உள்ளங்களின் இதயங்களை தொடுவதில் மிகச்சிறப்பானவைகளை அவர்களிடமிருந்து வெளியே கொண்டுவர அருள்புரியும் – ஆமென்.

வெளியீடு
**தகவல் தொடர்பு குழு**
**தெலசால் சபை, இந்திய மறைப்பணித்தளம்.**
இளைஞர் நகர் புல்லூத்து, நாகமலை, மதுரை – 625019